இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 15-06-2023

# அமித்ஷாக்கள் அறிக! 2

உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள் தமிழ்நாட்டுக்கு வருகை தருவதை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வைத்த கேள்வி என்பது, **“தமிழ்நாட்டுக்காக பா.ஜ.க. ஆட்சியில் கடந்த ஒன்பது ஆண்டு காலத்தில் செய்து தரப்பட்ட சிறப்புத் திட்டங்கள் என்னென்ன? அதனை உள்துறை அமைச்சர் அவர்கள் பட்டியலிடுவாரா?”** என்று தான்!

வழக்கமாக ஒரு ஒன்றிய அரசாங்கம் ஒரு மாநில அரசுக்கு வழக்கமாகச் செய்து தரும் திட்டப்பணி களையும், நடைமுறை நிதி ஒதுக்கீடுகளையும் பட்டியலிட்டு விட்டுப் போயிருக்கிறார் உள்துறை அமைச்சர் அவர்கள்.

சிறப்புத் திட்டங்கள் என முதலமைச்சர் அவர்கள் கேட்டது, தமிழ்நாட்டுக்காகச் செய்து தரப்பட்ட சிறப்புத் திட்டங்கள் எவை என்பது ஆகும். மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கப்படும் என்பது தமிழ்நாட்டுக்கான சிறப்புத் திட்டம் ஆகும். அது நிறைவேற்றப்பட்டு இருக்குமானால் பா.ஜ.க.வை மனமாரப் பாராட்டலாம். ஆனால் அது அறிவிக்கப்பட்டதோடு எட்டாண்டுகளாக அப்படியே கிடக்கிறது. அப்படி எந்தத் திட்டத்தையாவது தமிழ்நாட்டுக்கு சிறப்பாகக் கொண்டு வந்துள்ளார்களா என்பதே நம் முன் நிற்கும் கேள்வி ஆகும்.

மத்தியில் ஆட்சி செய்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில், தமிழ்நாட்டின் பங்கு அதிகமாக இருந்த காரணத்தால், தமிழகத்திற்கு வளம் சேர்க்கும் திட்டங்கள் நிறைய நிறைவேற்றப்பட்டன. ஒன்றிய அரசிடமிருந்து பல்வேறு திட்டங்களும் அதற்கான நிதியும் தமிழ்நாட்டிற்கு நோக்கிக் குவிய ஆரம்பித்தன.

இந்தியா வளர்ச்சிப்பாதையில் செல்லுகிற மகத்தான காலகட்டத்தில், தமிழ்நாட்டிற்கு வளம் சேர்க்கும் திட்டங்களும் எண்ணிலடங்கா அளவில் நாளோரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக 2004 - 2009 வரை நிறைவேற ஆரம்பித்தன. அத்தகைய சாதனைகளின் பட்டியலை சுருக்கமாக இப்போது காணலாம். பா.ஜ.க. ஆட்சிக்கும் தி.மு.க. தோழமையுடன் இருந்த காங்கிரஸ் ஆட்சி ஒன்றிய அளவில் அமைந்திருந்தபோது கொண்டு வரப்பட்ட சிறப்புத் திட்டங்களையும் காணும் போது மலைப்பாக இருக்கும். சிறந்த காங்கிரஸ் எழுத்தாளரான ஆ.கோபண்ணா தனது நூலில் இதுகுறித்து விரிவாக தொகுத்து தந்துள்ளார்.

**✶ தமிழ் செம்மொழித் திட்டம் நிறைவேற்றப்பட்டு, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் 18.08.2007 அன்று சென்னையில் தொடங்கி வைக்கப்பட்டது.**

**✶ செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் மூலம், தேசிய அளவில் சிறந்து விளங்கும் தமிழறிஞர் ஒருவருக்கு ஐந்து லட்ச ரூபாய் விருதுத் தொகை கொண்ட தொல்காப்பியர் விருதும், அயல்நாட்டுத் தமிழறிஞர்களில் ஒரு வருக்கும், அயல்நாடுகளில் வாழும் இந்தியத் தமிழ் அறிஞர்களில் ஒரு வருக்கும் ஆக, தலா ஐந்து லட்ச ரூபாய் விருதுத்தொகை கொண்டுள்ள இரண்டு குறள் பீட விருதுகளும், தலா ஒரு லட்ச ரூபாய் விருதுத் தொகை கொண்டுள்ள இளம் தமிழறிஞர்களுக்கான ஐந்து விருதுகளும் ஆண்டுதோறும் நமது குடியரசுத் தலைவரால் வழங்கப்பட ஒன்றிய அரசு அனுமதித்துள்ளது.**

**✶ சென்னைக்கு அருகில் ஒரக்கடத்தில் ரூ.470 கோடி முதலீட்டில், ஒன்றிய அரசின் தேசிய மோட்டார் வாகனச் சோதனை மற்றும் ஆராய்ச்சி உள்ளிட்ட வளர்ச்சிக் கட்டமைப்பு மையம் (National Automotive Testing Research and Development Infrastructure Project NATRIP) 04.11.2006 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டன.**

**✶ தேசிய சித்த மருத்துவ ஆய்வு மையம் தாம்பரத்தில் நிறுவப்பட்டுள்ளது.**

**✶ சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ரயில்வே மண்டலம் அமைக்கப்பட்டுள்ளது.**

**✶ சேலம் உருட்டாலையைச் சர்வதேச அளவுக்கு உயர்த்தி, ரூ.1,553 கோடி செலவில் புதிய குளிர் உருட்டாலை (Cold Rolling Mill) அமைக்கப்பட்டுள்ளது.**

**✶ சேலம் அரசினர் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரியை ரூ.120 கோடி செலவில் ‘சூப்பர் ஸ்பெஷாலிட்டி’ மருத்துவக் கல்லூரியாக மேம்படுத்தப்பட்டுள்ளது.**

**✶ தமிழ்நாட்டில் உள்ள 4,676 கிலோ மீட்டர் நீள தேசிய நெடுஞ்சாலைகளில் 3,226 கிலோ மீட்டர் நீள சாலைகள் நான்குவழிச் சாலைகளாக மேம்படுத்தப்பட்டுள்ளன. 650 கிலோ மீட்டர் நீள மாநில நெடுஞ் சாலைகள் தேசிய நெடுஞ்சாலைகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.**

**✶ கத்திபாரா சந்திப்பு, பாடி சந்திப்பு, கோயம்பேடு சந்திப்பு ஆகிய இடங்களில் ரூ.490 கோடி செலவில் மிகப் பிரம்மாண்டமான மேம்பாலங்கள் கட்டும் பணிகள் 2005இல் தொடங்கப்பட்டு, கத்திபாரா சந்திப்பு, பாடி சந்திப்புகளில் பணிகள் முடிவடைந்து, மேம்பாலங்கள் திறக்கப்பட்டுள்ளன. மக்கள் மகிழ்ச்சி அடையும் வகையில் போக்குவரத்துகள் பயன்பட்டு வருகின்றன.**

**✶ சென்னை விமான நிலையத்தின் எதிரே திரிசூலத்தில் மேம்பாலமும், தாம்பரம் இரும்புலியூர் அருகே வாகனச் சுரங்கப் பாதையும் அமைக்கப்பட்டுள்ளன.**

**✶ ரூ.1,655 கோடி மதிப்பீட்டில் சென்னை துறைமுகம், மதுரவாயில் இடையே பறக்கும் சாலை அமைத்திட அனுமதிக்கப்பட்டு, 08.01.2009 அன்று, பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அடிக்கல் நாட்டி, பணிகள் தொடங்கப்பட்டன.**

**✶ தமிழ்நாட்டில் கடந்த (2004-2009) ஐந்து ஆண்டுகளில் ரூ.34,102 கோடி மதிப்பீட்டிலான தேசிய நெடுஞ்சாலைகள், மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள்.**

**✶ ஆயிரத்து 605 கோடியே 76 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பிற சாலைகள் மேம்பாடு தொடர்பான ஒன்றிய அரசின் திட்டங்கள்.**

**✶ ரூ2,427 கோடி மதிப்பீட்டில், நூறாண்டுகால கனவை நனவாக்கிடும் சேது சமுத்திரத் திட்டம்.**

**✶ கப்பல் போக்குவரத்து மற்றும் கடல்வழி வர்த்தகம் பெருகும் வகையில், தமிழகத்தில் உள்ள பல்வேறு துறைமுக வசதிகளை மேம்படுத்தும் திட்டங்கள். குறிப்பாக எண்ணூர் துறைமுக விரிவாக்கத் திட்டம்.**

**✶ சென்னைத் துறைமுகத்தின் இரண்டாவது சரக்குப் பெட்டக முனையம் ஏற்படுத்தும் திட்டம்.**

**நாகர்கோவில்,குளச்சல் துறைமுகத்தைச் சர்வதேசப்பெட்டகங்களைக் கையாளும் துறைமுகமாக (International container Transhipment Hub Port) மேம்படுத்தும் திட்டம்.**

**✶ விளையாட்டு மற்றும் உள்நாட்டு நீர்வழிப் போக்கு வரத்து வசதிகளை மேம்படுத்தும் திட்டம் உள்பட 20 ஆயிரத்து 956 கோடியே 45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பல திட்டங்கள் எனக் கப்பல் மற்றும் நெடுஞ்சாலைத்துறைமூலம் மொத்தம் 56 ஆயிரத்து 664 கோடியே 21 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பல்வேறு திட்டங்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழழ்நாட்டிற்கு அனுமதிக்கப்பட்டு, புதிய வரலாறு படைக்கப்பட்டுள்ளது.**

**✶ நெசவாளர் சமுதாய மக்கள் பெரும்பயன் எய்திடும் வகையில், சென்வாட் வரி நீக்கப்பட்டுள்ளது.**

**மதம் மற்றும் சிறுபான்மைப் பிரிவினரின் பொருளாதாரம் மற்றும் சமூக ரீதியாகப் பின்தங்கியோர் நலன்காக்கும் தேசிய ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.**

**✶ சென்னை மாநகர குடிநீர்ப் பிரச்சினை தீர ரூ.908 கோடி மதிப்பீட்டில், தென்சென்னை நெம்மேலியில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

**✶ அடக்குமுறை பொடா சட்டம் ரத்து செய்யப்பட்டது.**

-தொடரும்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (13.6.2023) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, நல் ஆளுமை உள்ள கிராம ஊராட்சி எனும் கருப்பொருளில் தேசிய அளவில் முதலிடம் பெற்றதற்காக கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை ஊராட்சி ஒன்றியம், பிச்சானூர் ஊராட்சிக்கு ஒன்றிய அரசால் வழங்கப்பட்ட விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்த நிகழ்வின்போது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் மரு.தாரேஸ் அஹமது, பிச்சானூர் ஊராட்சி மன்றத் தலைவர் பொ.மருதாசலம், பிச்சானூர் ஊராட்சி செயலர் திருமதி.வ.உமாமகேஸ்வரி மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தமிழ்நாடு தலைமைச் செயலகத்தில் ஜனநாயக விரோதமாக அமலாக்கத்துறை சோதனை!

# பா.ஜ.க.வின் அச்சுறுத்தலை கண்டித்த தலைவர்களுக்கு நன்றி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, ஜூன் 15 -**

**தமிழ்நாடு தலைமைச் செயலகத்தில் ஜனநாயக விரோதமாக அமலாக்கத் துறை சோதனை நடத்தியதைக் கண்டித்து அறிக்கை விடுத்த எதிர்க் கட்சித் தலைவர்களுக்கு நன்றி தெரிவித்து சமூக வலைதளப் பதிவு வெளியிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “பா.ஜ.க.வின் அச்சுறுத்தும் தந்திரங்களையும், ஜனநாயக விரோதச் சோதனைகளையும் எதிர்ப்பதில் உறுதிப்பாட்டுடன் இருப்போம்!” என்று குறிப்பிட்டுள்ளார்.**

பா.ஜ.க. அரசின் ஜனநாயக விரோதச் செயலுக்குக் கண்டனம் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு நன்றி தெரிவித்து கழகத் தலைவர் அவர்கள் சமூக வலை தளங்களில் இட்ட பதிவு வருமாறு: -

தமிழ்நாடு தலைமைச் செயலகத்தில் ஜனநாயக விரோதமாக அமலாக்கத்துறை சோதனையை ஏவிவிட்டு, கூட்டுறவுக் கூட்டாட்சித் தத்துவத்துக்கு ஊறு விளைவித்த ஒன்றிய பா.ஜ.க. அரசின் செயலுக்குக் கடும் கண்டனத்தைத் தெரிவித்தமைக்காக மல்லிகார்ஜுன கார்கே, சரத்பவார், மம்தா பானர்ஜி, அரவிந்த் கேஜ்ரிவால், சீதாராம் யெச்சூரி முதலிய அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் எனது நன்றி.

நாங்கள் துவளாமல், ஊக்கம் குறையாமல் இருக்கிறோம். பா.ஜ.க.வின் அச்சுறுத்தும் தந்திரங்களையும் ஜனநாயக விரோதச் சோதனைகளையும் எதிர்ப்பதில் உறுதிப்பாட்டுடன் இருப்போம்.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### எதிர்க்கட்சியினரை மிரட்டுவதற்காக சோதனை நடத்துவது போன்ற போக்கை ஒன்றிய பா.ஜ.க. அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும்!

# மனித உரிமையை மீறும் வகையில் - அமைச்சர் செந்தில் பாலாஜி வீட்டில் சோதனை!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கண்டனம்!

*சென்னை, ஜூன் 15 -*

மனித உரிமையை மீறும் வகையில் அமைச்சர் செந்தில் பாலாஜி வீட்டில் சோதனை நடத்தப்படுகிறது என, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கண்டனம் தெரிவித்தார்.



சென்னை பசுமை வழிச் சாலையில் உள்ள அமைச்சர் செந்தில் பாலாஜியின் வீட்டில் நேற்று முன்தினம் காலையில் இருந்து அமலாக்கத்துறையினர் சோதனையில் ஈடுபட்டனர். இந்த நிலையில் அமைச்சரை சந்தித்து பேச தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக சட்டத்துறை இணைச் செயலாளர் பரந்தாமன் எம்.எல்.ஏ. ஆகியோர் மாலை 3.30 மணியளவில் வருகை தந்தனர். ஆனால் அவர்களை வீட்டின் உள்ளே அனுமதிக்க அமலாக்கத்துறையினர் மறுத்ததால், அமைச்சரை வெளியே அழைத்து வந்து பேச வைக்குமாறு கேட்டனர். உயர் அதிகாரிகளிடம் அனுமதி பெற்று விட்டு வருவதாக சென்ற அமலாக்கத்துறையினர், 15 மணிநேரத்திற்கு மேலாகியும் திரும்பி வரவில்லை.

எனவே செய்தியாளர்களை சந்தித்த அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி குறிப்பிட்டதாவது :-

“அமித் ஷா தமிழ்நாட்டிற்கு வந்தபோது, ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு என்ன செய்தது என பட்டியலிட தயாரா என தமிழ்நாடு முதலமைச்சர் கேள்வி எழுப்பி இருந்தார். அதற்கு உரிய பதில் சொல்ல முடியவில்லை. அதேபோல அண்ணாமலையின் பேச்சால் அ.தி.மு.க. - பா.ஜ.க. இடையே மோதல் உருவாகி உள்ளது. இதையெல்லாம் திசை திருப்பும் வகையில் தி.மு.க. ஆட்சியில் ஊழல் நடைபெறுவது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தவே இந்த சோதனை நடைபெறுகிறது. முந்தைய ஆட்சியில் நடந்த ஊழலை தி.மு.க. ஆட்சியில் நடந்த ஊழலைப் போன்று தோற்றத்தை ஏற்படுத்த திட்டமிட்டு இந்தச் சோதனை நடக்கிறது.

சோதனை காலையிலேயே தொடங்கிய நிலையில் அப்போதே உள்ளே சென்ற அமைச்சர் இப்போது என்ன நிலையில் இருக்கிறார் என்பதைத் தெரிந்துகொள்ளவே மனிதாபிமான அடிப்படையில் அவரைச் சந்திக்க கேட்டோம். ஆனால் மனித உரிமையை மீறும் வகையில் இந்தச் சோதனை நடைபெறுகிறது. அமைச்சர் செந்தில் பாலாஜியை சந்திக்க வழக்கறிஞர்களான எங்களுக்கே அனுமதி வழங்கப்படவில்லை.

செந்தில் பாலாஜிக்கு என்ன ஆனது என அறிந்து கொள்ளும் உரிமை எங்களுக்கு உள்ளது. அதிகாரிகளிடம் பணிவோடு கேட்ட பிறகும் அமைச்சரைச் சந்திக்க எங்களுக்கு அனுமதி வழங்கவில்லை.

தலைமைச் செயலாளரிடம் அனுமதி பெற்றுத் தான், தலைமைச் செயலகத்தில் சோதனை நடத்த வேண்டும். தலைமைச் செயலாளரிடம் அனுமதி பெற வேண்டும் என்ற விதி மீறப்பட்டுள்ளது.

கர்நாடகாவில் டி.கே. சிவக்குமாரை டார்கெட் செய்து இப்படித்தான் அமலாக்கத்துறை தொடர்ந்து ரெய்டு நடத்தினர். ஆனால் எந்த முறைகேட்டையும் நிரூபிக்கவில்லை. அங்கு தேர்தலிலும் பா.ஜ.க. படுதோல்வி அடைந்தது. அதே நிலைதான் இங்கும் உருவாகும். இன்னும் 10 அமாவாசை தான் பா.ஜ.க. ஆட்சிக்கு இருக்கிறது. அதற்குள் இப்படியெல்லாம் சோதனைகள் நடத்தி களங்கம் கற்பிக்க நினைக்கிறார்கள். ஆனால் அமலாக்கத்துறை இதுவரை எந்த வழக்கிலும் உரிய தீர்வைப் பெற்றுக் கொடுத்தது இல்லை. இவையெல்லாம் மிரட்டல்களுக்கே. இந்தப் போக்கை பா.ஜ.க. நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இதுபோன்ற சோதனைகளால் ஒரு மனிதரின் புகழ் , பெருமையை ஏதும் செய்ய முடியாது.

1976 முதல் இதுபோன்ற பல சோதனையை தி.மு.க.வினர் பார்த்துவிட்டோம். இதுவரை அமலாக்கத்துறை பதிவு செய்த வழக்கில் 100ல் 0.5 என்ற அளவில் கூட சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதில்லை.

கடந்த ஆட்சிக் காலத்தில் தலைமைச் செயலகத்தில் சோதனை நடத்தப்பட்டபோது எடப்பாடி பழனிச்சாமி, ஓ.பன்னீர் செல்வம் ஆகியோர் வாய் திறக்கவில்லை. ஆனால் அப்போதும் எங்கள் தலைவர் மு.க.ஸ்டாலின்தான் அதைக் கண்டித்தார்.

இவ்வாறு ஆர்.எஸ். பாரதி குறிப்பிட்டார்.

## ஆவடியில் சாலை பணிகள்!

*திருவள்ளூர், ஜூன் 15 -*

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நெமிலிச்சேரி ஊராட்சி சோழன் நகர் பகுதியில் உள்ள 5 தெருக்களுக்கான சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைப்பதற்கான திட்ட மதிப்பீடுகள் அளிக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்த நிலையில் சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைக்கப்பட உள்ள பகுதிகளை மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. ஆய்வு மேற்கொண்டு பணிகள் துவங்குவது தொடர்பாக அதிகாரிகளிடம் கேட்டறிந்து சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணிகளை விரைவில் முடிக்க வேண்டும் எனவும் சாலைகளை தரமாக அமைக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் டி.தேசிங்கு, மாவட்ட நிர்வாகிகள் ப.நரேஷ்குமார், பொன்.விமல், ஒன்றியச் செயலாளர்கள் ப.ச.கமலேஷ், சே. பிரேம் ஆனந்த், பரமேஸ்வரி கந்தன், ஊராட்சி மன்ற தலைவர் கு.தமிழ்செல்வி, ஒன்றிய கவுன்சிலர் நெமிலிச்சேரி சுரேஷ்குமார், வாசுகி எட்வின் நிர்வாகிகள் நடுகுத்தகை கே.சுரேஷ்குமார், கட்டத்தொட்டி குணாசேகரன், பா.கந்தன், இ.வி.பி.பிரதீப் உள்பட பலர் உடனிருந்தனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (13.06.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை இந்திய விளையாட்டு ஆணைய தலைமை இயக்குநர் (Director GeneralSAI) சந்தீப் பிரதான் சந்தித்து தமிழ்நாட்டில் கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக நடத்துதல், விளையாட்டு உட்கட்டமைப்பு மேம்பாடுகள், இந்திய விளையாட்டு ஆணைய திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் தொடர்பாக ஆலோசனை மேற்கொண்டார். கூட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, இந்திய விளையாட்டு ஆணையம் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.